3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, உயர் அழுத்த மின் கேபிள்கள் திறந்தவெளியில் செல்வதால் பொது மக்கள் சிரமம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. சென்னையில் சில இடங்களில் உயர் அழுத்த மின் கேபிள்கள் திறந்தவெளியில் செல்வதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி ஆகியோர், விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் இதை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சேர்ந்த திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழு மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கியுள்ளது

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாழ்த்துச் செய்தியை இந்த அவையின்முன் வைக்க விரும்புகிறேன்.*

கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியில் உள்ள கிரெசன்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் +2 படித்த ரிஃபாத் சாருக் என்ற மாணவர் கையடக்க செயற்கைக்கோள் ஒன்றை உருவாக்கியுள்ளார். இந்த செயற்கைக்கோளுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்கள் நினைவாக ‘Kalam Sat’ *என்று பெயரிடப்பட்டு, இந்திய நேரப்படி*